நீதிமன்ற படிவ எண்.53
(விதி 42ஜ காண்க)
<u>சாட்சியின் சான்றுரை</u>
(கு.வி.மு.ச., அத்தியாயம் XXIII)
தலைமை நீதித்துறை நடுவர் நீதிமன்றம், தேனி.

S.C.No. 82/2019

<u>அ.சா: 1 (LW 1)சாட்சியின் சான்றுரை</u>

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | மணிகண்டன். | சாதி | : | |
| தந்தை பெயர் | : | | தொழில் | : | |
| கிராமம் | : | | மதம் | : | |
| வட்டம் | : | | வயது | : | |

20.08.2025 நாளன்று 1969ம் ஆண்டு உறுதிமொழிச் சட்டம் (மையச் சட்டம் 44/1969) இன் வகைமுறைகளுக்கு உட்பட்டு உளமாற உறுதியளிக்கப்படுகிறது.

---

(4வது எதிரி ஆஜர். 5வது எதிரி ஆஜர்படுத்தப்பட்டார். 1, 2 மற்றும் 3வது எதிரிகள் ஆஜர் இல்லை. 1, 2 மற்றும் 3வது எதிரிகள் தரப்பில் சட்டப்பிரிவு 355 BNSS Actன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது. எதிரிகள் தரப்பு வழக்கறிஞர் ஆஜர். சாட்சி காவல் துறையினரால் அடையாளம் காட்டப்பட்டு சாட்சினுடைய ஆதார் அடையாள அட்டையுடன் ஒப்பிடப்பட்டு சரிப்பார்க்கப்பட்டது.)

சாட்சி இன்று அழைக்கப்பட்டு திரு.S.சுரேஷ் கிரேடு 3 பெஞ்ச் கிளார்க் (மாற்றுப்பணி) அவர்களால் உள்ளார்ந்த உறுதி உரை செய்யப்பட்டு சத்தியபிரமாணம் செய்யப்பட்டு விசாரணை செய்யப்படுகிறார்.

<u>முதல் விசாரணை:</u> தொடங்கப்பட்ட நேரம் 12.08 பி.ப

நான் தேனி மாவட்டம் தர்மாபுரியில் குடும்பத்துடன் குடியிருந்து வருகிறேன். நான் கடந்த 22 வருடமாக டாஸ்மாக் கடையில் மேற்பார்வையாளராக பணிபுரிந்து வருகிறேன். என்னுடன் உதவி சேல்ஸ்மேனாக கண்ணன், முருகன், வரதராஜ், செந்தில் மற்றும் சுருளியாண்டவர் ஆகியோர் சம்பவத்தின்போது பணிபுரிந்து வந்தனர். கடந்த 19.12.2016ம் தேதி இரவு 10.00 மணியளவில் நான் டாஸ்மாக் கடையை மூடிவிட்டு நானும் எனது மாமா கணபதி என்பவரும் இருசக்கர வாகனத்தில் மதுபானம் விற்ற பணம் ரூ.777,66/–யை ஒரு கருப்பு கலர் பேக்கில் எடுத்துக்கொண்டு

ஓடை வழியாக சென்றுக்கொண்டிருந்தபொழுது சுமார் 20வயது டு 25வயது மதிக்கத்தக்க இரண்டு இளைஞர்கள் எங்கள் மீது மிளகாய் தூள் வீசினார். என்னையும் எனது மாமாவையும் அவர்கள் இருவரும் கைகளால் அடித்ததால் நாங்கள் இருசக்கர வாகனத்திலிருந்து கீழே விழுந்தோம். பின்னர் இரண்டு நபர்களும் நான் கையில் வைத்திருந்த கருப்பு பையை பிடிங்கி கொண்டனர். அசிங்கமாக திட்டினர். அதில் ஒரு நபர் கத்தியை எடுத்து தாக்க வந்தபொழுது நான் கையால் பிடித்ததில் எனக்கு உள்ளங்கையில் கிழிந்த காயம் ஏற்பட்டது. ஒரு நபர் கம்பால் எனது வலது முழங்காலில் அடித்து காயம் ஏற்படுத்தினார். பணத்தை பிடிங்கியவுடன் இருசக்கர வாகனத்தில் வந்த மூன்று நபர்கள் அந்த இரண்டு நபர்களுடன் தப்பி சென்றுவிட்டனர். நான் ஊருக்குள் சென்று ராஜா மற்றும் ராஜகுமாரிடம் தகவல் சொல்லி விசாரித்தேன். நான் முதலுதவியை வீரபாண்டி ஆரம்ப சுகாதர நிலையத்தில் சிகிச்சை பெற்றேன். பின்னர் மேல்சிகிச்சைக்காக தேனி அரசு மருத்துவமனையில் சிகிச்சைக்கு சேந்தேன்.

காவல் நிலையத்தில் எனது வாக்குமூலத்தை போலீசார் எழுத நான் கையொப்பம் செய்தேன். நான் கொடுத்த புகார் வாக்மூலம் **அ.சா.ஆ.1** ஆகும். போலீசார் என்னை விசாரித்தனர். என்னிடம் காட்டப்படும் 2000 ரூபாய் நோட்டுகள் உள்ள புகைப்படங்கள் மற்றும் 100ரூபாய் நோட்டுகள் உள்ள புகைப்படங்கள் 50 ரூபாய் நோட்டுகள் உள்ள புகைப்படங்கள் 10 ரூபாய் நோட்டுகள் உள்ள புகைப்படங்கள் 20 ரூபாய் நோட்டுகள் உள்ள புகைப்படங்கள் மொத்த 7 புகைப்படங்கள் **அ.சா.ஆ.2** வரிசையாகும். TN 60 D 4111 என்ற ஹோண்டா ஸ்பிளன்டர் உள்ள 2 புகைப்படங்கள் **அ.சா.ஆ.3** வரிசையாகும்.

<u>எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை:</u>

கணபதி எனக்கு மாமா ஆவார். அவர் எனக்கு துணையாக எப்பொழுதாவதுதான் வருவார். தினந்தோறும் வரமாட்டார். புகார் கொடுக்கும்பொழுது என்னுடன் யார்யார் வந்தார்கள் என்றால் என்னுடன் வேலை பார்த்த அனைவரும் வந்தார்கள். நான் கொடுத்த புகாரில் என்னுடன் வேலை பார்த்த நபர்கள் சாட்சியாக கையொப்பமிட்டுள்ளார்கள் என்றால் சரிதான். கருப்பு பையில் என்னென்ன பொருட்கள் இருந்தது என்றால் ஆதார் அடையாள அட்டை, பாஸ்புக், பணம் இருந்தது.

நான் தேனி க.விலக்கு அரசு மருத்துவ கல்லூரி மருத்துவமனையில் சேரும்பொழுது என்னை தெரிந்த 5 நபர்கள் தாக்கியதால்தான் காயம் ஏற்பட்டது என்று கூறியுள்ளேன் என்றால் சரிதான். இந்த வழக்கின் எதிரிகள் யாரையும் எனக்கு அடையாளம் தெரியாது. 10லிருந்து 20முறை வந்து போலீசார் விசாரித்தார்கள். காவல் ஆய்வாளர் என்னை 4, 5 முறை விசாரித்தார். என்னை தாக்கிய நபர்கள் பற்றிய அடையாளம் பற்றி எனக்கு காவல் ஆய்வாளர் காட்டவில்லை. என்னுடைய பணம் மற்றும் கருப்பு பை ஆகிய இரண்டையும் அன்றைய தினம் இரவே கண்டுபிடித்துவிட்டதாக என்னிடம் கூறினார்கள். என்னுடைய கருப்பு பை மற்றும் பணத்தை நான் போலீசாரிடம் அடையாளம் காட்டவில்லை. நீதிமன்றத்தில்தான் அடையாளம் காண்பித்தேன். கணபதி என்பவருக்கும் காயம் ஏற்பட்டது. அவர் மருத்துவமனையில் சிகிச்சையில் சேரவில்லை. கணபதி என்னுடன் வரவில்லை என்றும் அவருக்கு காயம் ஏற்பட்டிருந்தால் அவர் மருத்துவமனையில் சேர்ந்திருப்பார் என்றும் அவர் வாரத காரணத்தினால்தான் அவர் மருத்துவமனையில் சேரவில்லை என்றும் சொன்னால் சரியல்ல. எனது பணத்தை எதிரிகள் யாரும் கொள்ளையடிக்கவில்லை என்றும் அவர்கள் யாரும் என்னை அடிக்கவில்லை என்றும் சொன்னால் சரியல்ல.

விசாரணை முடிக்கப்பட்ட நேரம் 12.28 பி.ப

*Taken down by me/before me in open Court interpreted read over to the witness and admitted by the deponent to be correct.*

SARAVANAKUMAR.G.N Digitally signed by SARAVANAKUMAR.G.N Date: 2025.08.20 15:22:27 +0530

Chief Judicial Magistrate,
Theni
Date:20.08.2025

நீதிமன்ற படிவ எண்.53
(விதி 42ஐ காண்க)
<u>சாட்சியின் சான்றுரை</u>
(கு.வி.மு.ச., அத்தியாயம் XXIII)
தலைமை நீதித்துறை நடுவர் நீதிமன்றம், தேனி.

S.C.No. 82/2019

<u>அ.சா: 2 (LW 2 )சாட்சியின் சான்றுரை</u>

| | | | |
|---|---|---|---|
| பெயர் | : கணபதி. | சாதி | : |
| தந்தை பெயர் | : | தொழில் | : |
| கிராமம் | : | மதம் | : |
| வட்டம் | : | வயது | : |

20.08.2025 நாளன்று 1969ம் ஆண்டு உறுதிமொழிச் சட்டம் (மையச் சட்டம் 44/1969) இன் வகைமுறைகளுக்கு உட்பட்டு உளமாற உறுதியளிக்கப்படுகிறது.

---

(1வது எதிரி ஆஜர். 5வது எதிரி ஆஜர்படுத்தப்பட்டார். 2, 3 மற்றும் 4வது எதிரிகள் ஆஜர் இல்லை. 2, 3 மற்றும் 4வது எதிரிகள் தரப்பில் சட்டப்பிரிவு 355 BNSS Actன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது. எதிரிகள் தரப்பு வழக்கறிஞர் ஆஜர். சாட்சி காவல் துறையினரால் அடையாளம் காட்டப்பட்டு சாட்சினுடைய ஆதார் அடையாள அட்டையுடன் ஒப்பிடப்பட்டு சரிப்பார்க்கப்பட்டது.)

சாட்சி இன்று அழைக்கப்பட்டு திரு.S.சுரேஷ் கிரேடு 3 பெஞ்ச் கிளார்க் (மாற்றுப்பணி) அவர்களால் உள்ளார்ந்த உறுதி உரை செய்யப்பட்டு சத்தியபிரமாணம் செய்யப்பட்டு விசாரணை செய்யப்படுகிறார்.

<u>முதல் விசாரணை:</u> தொடங்கப்பட்ட நேரம் 12.28 மு.ப

நான் தேனி மாவட்டம் தர்மாபுரியில் குடும்பத்துடன் வசித்து வருகிறேன். சம்பவத்தின்போது அ.சா.1 டாஸ்மாக்கிலிருந்து பணம் கொண்டும்வரும்பொழுது நான் கூடவே வருவேன். அ.சா.1 மணிகண்டன் எனக்கு மச்சான் முறை வேண்டும். சுமார் 9 வருடத்திற்கு முன்பு இரவு 10.00 மணியளவில் நானும் அ.சா.1ம் இருசக்கர வாகனத்தில் வரும்பொழுது ஓடை பக்கத்தில் மூன்று நபர்கள் வண்டியை கீழே தள்ளிவிட்டனர். அப்பொழுது நாங்கள் கீழே விழுந்துவிட்டோம். மிளகாய் பொடியை எங்கள்மீது தூவினர். 3பேர் கத்தியை காட்டி அ.சா.1ன் மீது ஏறி வழுக்கட்டாயமாக அவர் வைத்திருந்த

பணப்பையை பிடிங்கிவிட்டனர். அவர்கள் அசிங்கமாக பேசினர். நாங்கள் இருவரும் ஊருக்கு சென்றோம். பணப்பைக்குள் சுமார் 76ஆயிரம் பணம் இருக்கும். நாங்கள் இருவரும் மற்றொரு இருசக்கர வாகனத்தில் வீரபாண்டி ஆரம்ப சுகாதர நிலையத்திற்கு வந்து அ.சா.1 சிகிச்சை பெற்றார். பின்னர் மேல் சிகிச்சைக்காக அ.சா.1ஐ தேனி அரசு மருத்துவமனைக்கு அழைத்து சென்றோம். இருட்டாக இருந்ததால் எதிரிகளை அடையாளம் காணமுடியவில்லை. எதிரிகளின் பெயரையும் பின்னர் விசாரித்து தெரிந்து கொள்ளவில்லை. போலீசார் என்னை விசாரித்தனர்.

எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை:

போலீசார் என்னை ஒருமுறைதான் விசாரித்தனர். தற்பொழுது சொன்ன விபரத்தைதான் போலீசார் விசாரணையிலும் சொன்னேன். எனக்கு வீரபாண்டி ஆரம்ப சுகாதர நிலையத்தில் முதலுதவி சிகிச்சை அளிக்கப்பட்டது. அதன் பின்னர் தேனி அரசு மருத்துவ கல்லூரி மருத்துவமனைக்கு மேல்சிகிச்சைக்காக என்னையும் மணிகண்டனையும் அனுப்பி வைத்தனர். நாங்கள் இருவரும் ஒரு நாள் மட்டும் சிகிச்சை எடுத்துக்கொண்டோம். எங்களை தாக்கிய நபர்களை பற்றி போலீசார் எங்களிடம் அடையாளம் காட்டவில்லை. நான் முதல் விசாரணையில் சொன்னதுபோல் எந்த சம்பவும் நடைபெறவில்லை என்றால் சரியல்ல. அ.சா.1 எனது மைத்துனர் என்பதால் அவருக்கு ஆதரவாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

விசாரணை முடிக்கப்பட்ட நேரம் 12.36 பி.ப

*Taken down by me/before me in open Court interpreted read over to the witness and admitted by the deponent to be correct.*

SARAVANAKUMAR.G.N
Digitally signed by SARAVANAKUMAR.G.N
Date: 2025.08.20 15:22:34 +0530

Chief Judicial Magistrate,
Theni
Date:20.08.2025

நீதிமன்ற படிவ எண்.53
(விதி 42ஐ காண்க)
<u>சாட்சியின் சான்றுரை</u>
(கு.வி.மு.ச., அத்தியாயம் XXIII)
தலைமை நீதித்துறை நடுவர் நீதிமன்றம், தேனி.

S.C.No. 82/2019

<u>அ.சா: 3 (LW 3)சாட்சியின் சான்றுரை</u>

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | ராஜ்குமார். | சாதி | : | |
| தந்தை பெயர் | : | | தொழில் | : | |
| கிராமம் | : | | மதம் | : | |
| வட்டம் | : | | வயது | : | |

20.08.2025 நாளன்று 1969ம் ஆண்டு உறுதிமொழிச் சட்டம் (மையச் சட்டம் 44/1969) இன் வகைமுறைகளுக்கு உட்பட்டு உளமாற உறுதியளிக்கப்படுகிறது.
---------------------------------------------------------------------------------------------

(1வது எதிரி ஆஜர். 5வது எதிரி ஆஜர்படுத்தப்பட்டார். 2, 3 மற்றும் 4வது எதிரிகள் ஆஜர் இல்லை. 2, 3 மற்றும் 4வது எதிரிகள் தரப்பில் சட்டப்பிரிவு 355 BNSS Actன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது. எதிரிகள் தரப்பு வழக்கறிஞர் ஆஜர். சாட்சி காவல் துறையினரால் அடையாளம் காட்டப்பட்டு சாட்சினுடைய ஆதார் அடையாள அட்டையுடன் ஒப்பிடப்பட்டு சரிப்பார்க்கப்பட்டது.)

சாட்சி இன்று அழைக்கப்பட்டு திரு.S.சுரேஷ் கிரேடு 3 பெஞ்ச் கிளார்க் (மாற்றுப்பணி) அவர்களால் உள்ளார்ந்த உறுதி உரை செய்யப்பட்டு சத்தியபிரமாணம் செய்யப்பட்டு விசாரணை செய்யப்படுகிறார்.

<u>முதல் விசாரணை:</u> தொடங்கப்பட்ட நேரம் 12.37 பி.ப

நான் தேனி மாவட்டம் தர்மாபுரியில் குடியிருந்து வருகிறேன். நான் டாஸ்மாக் கடையில் சேல்ஸ்மேனாக வேலை செய்து வருகிறேன். அ.சா.1 மணிகண்டன் சம்பவத்தின்போது டாஸ்மாக் கடையின் மேற்பார்வையாளராக பணிபுரிந்து வந்தார். 19.07.2016ம் தேதி இரவு 11.00 மணியளவில் நானும் எனது மைத்துனர் ராஜா என்பவரும் கோவில் அருகே உட்கார்ந்து பேசிக்கொண்டிருந்தோம். அ.சா.1 மணிகண்டனும் அ.சா.2 கணபதியும் பதட்டத்துடன் இருசக்கர வாகனத்தில் வந்தனர். என்னவென்று விசாரித்தபொழுது அ.சா.1 என்னிடம் தானும் அ.சா.2 கணபதியும்

இருசக்கர வாகனத்தில் வந்துகொண்டிருந்தபொழுது 3 நபர்கள் வாகனத்தை மறித்து அவர்களை அடித்து பணப்பையை பிடுங்கி கொண்டதாக தெரிவித்தார். நாங்கள் போலீசுக்கு தகவல் கொடுத்தோம். பின்னர் அ.சா.1 மணிகண்டனை வீரபாண்டி ஆரம்ப சுகாதர நிலையத்திற்கு சிகிச்சைக்காக அழைத்து சென்றோம். போலீசார் என்னை விசாரித்தார்கள்.

எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை:

அ.சா.1 மணிகண்டன் நான் பணிபுரியும் கடையின் மேற்பார்வையாளர் என்றால் சரிதான். இவ்வழக்கு சம்பவம் பற்றி நேரடியாக எனக்கு எதுவும் தெரியாது. அ.சா.1, அ.சா.2 எனக்கு சொந்தகாரர் என்பதால் அவர்களுக்கு ஆதரவாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

விசாரணை முடிக்கப்பட்ட நேரம் 12.42 பி.ப

*Taken down by me/before me in open Court interpreted read over to the witness and admitted by the deponent to be correct.*

SARAVANAKUMAR.G.N Digitally signed by SARAVANAKUMAR.G.N Date: 2025.08.20 15:22:40 +0530

Chief Judicial Magistrate,
Theni
Date:20.08.2025

நீதிமன்ற படிவ எண்.53
(விதி 42ஐ காண்க)
<u>சாட்சியின் சான்றுரை</u>
(கு.வி.மு.ச., அத்தியாயம் XXIII)
தலைமை நீதித்துறை நடுவர் நீதிமன்றம், தேனி.

S.C.No. 82/2019

<u>அ.சா: 4 (LW 4)சாட்சியின் சான்றுரை</u>

| | | | |
|---|---|---|---|
| பெயர் | : ராஜா. | சாதி | : |
| தந்தை பெயர் | : | தொழில் | : |
| கிராமம் | : | மதம் | : |
| வட்டம் | : | வயது | : |

20.08.2025 நாளன்று 1969ம் ஆண்டு உறுதிமொழிச் சட்டம் (மையச் சட்டம் 44/1969) இன் வகைமுறைகளுக்கு உட்பட்டு உளமாற உறுதியளிக்கப்படுகிறது.

---

(1வது எதிரி ஆஜர். 5வது எதிரி ஆஜர்படுத்தப்பட்டார். 2, 3 மற்றும் 4வது எதிரிகள் ஆஜர் இல்லை. 2, 3 மற்றும் 4வது எதிரிகள் தரப்பில் சட்டப்பிரிவு 355 BNSS Actன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது. எதிரிகள் தரப்பு வழக்கறிஞர் ஆஜர். சாட்சி காவல் துறையினரால் அடையாளம் காட்டப்பட்டு சாட்சினுடைய ஆதார் அடையாள அட்டையுடன் ஒப்பிடப்பட்டு சரிப்பார்க்கப்பட்டது.)

சாட்சி இன்று அழைக்கப்பட்டு திரு.S.சுரேஷ் கிரேடு 3 பெஞ்ச் கிளார்க் (மாற்றுப்பணி) அவர்களால் உள்ளார்ந்த உறுதி உரை செய்யப்பட்டு சத்தியபிரமாணம் செய்யப்பட்டு விசாரணை செய்யப்படுகிறார்.

<u>முதல் விசாரணை:</u> தொடங்கப்பட்ட நேரம் 12.43 பி.ப

நான் தேனி மாவட்டம் தர்மாபுரியில் குடும்பத்துடன் குடியிருந்து வருகிறேன். நான் கூலி வேலை செய்து வருகிறேன். அ.சா.1 மணிகண்டன் எனக்கு மாமா முறையாவார். கடந்த 19.12.2016ம் தேதியன்று இரவு 10.00 மணியளவில் நானும் ராஜ்குமார் என்பவரும் கோவில் அருகே இருந்தபொழுது அ.சா.1 மணிகண்டனும் அ.சா.2 கணபதியும் பதறிக்கொண்டு இருசக்கர வாகனத்தில் கண்களை துடைத்துக்கொண்டு வந்தனர். அ.சா.1 அழுதுக்கொண்டு வந்தார். என்னவென்று விசாரித்தபொழுது 5 நபர்கள் இருசக்கர வாகனத்தில் வந்து தன்னை தாக்கி தான்

வைத்திருந்த பணப்பையை பிடுங்கி சென்றதாக கூறினார். அ.சா.1 மணிகண்டன் வீரபாண்டி காவல் நிலையத்திற்கு சென்று புகார் மனு கொடுத்தவுடன் சிகிச்சைக்காக மருத்துவமனைக்கு அழைத்து சென்றோம். போலீசார் என்னை விசாரித்தனர்.

<u>எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை:</u>

அ.சா.1 மணிகண்டன் எனக்கு மாமா ஆவார். அ.சா.2 எனது தாத்தா ஆவார். அவர் எந்த மருத்துவமனைக்கு சென்றார் என்று எனக்கு தெரியாது. இவ்வழக்கு சம்பவம் பற்றி நேரடியாக எனக்கு எதுவும் தெரியாது. அ.சா.1, அ.சா.2 எனக்கு சொந்தகாரர் என்பதால் அவர்களுக்கு ஆதரவாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

விசாரணை முடிக்கப்பட்ட நேரம் 12.47 பி.ப

*Taken down by me/before me in open Court interpreted read over to the witness and admitted by the deponent to be correct.*

SARAVANAKUMAR.G.N Digitally signed by SARAVANAKUMAR.G.N Date: 2025.08.20 15:22:47 +0530

Chief Judicial Magistrate,
Theni
Date:20.08.2025

நீதிமன்ற படிவ எண்.53
(விதி 42ஐ காண்க)
<u>சாட்சியின் சான்றுரை</u>
(கு.வி.மு.ச., அத்தியாயம் XXIII)
தலைமை நீதித்துறை நடுவர் நீதிமன்றம், தேனி.

S.C.No. 82/2019

<u>அ.சா: 5 (LW 5)சாட்சியின் சான்றுரை</u>

| | | | |
|---|---|---|---|
| பெயர் | : கண்ணன். | சாதி | : |
| தந்தை பெயர் | : | தொழில் | : |
| கிராமம் | : | மதம் | : |
| வட்டம் | : | வயது | : |

20.08.2025 நாளன்று 1969ம் ஆண்டு உறுதிமொழிச் சட்டம் (மையச் சட்டம் 44/1969) இன் வகைமுறைகளுக்கு உட்பட்டு உளமாற உறுதியளிக்கப்படுகிறது.

-----------------------------------------------------------------------

(1வது எதிரி ஆஜர். 5வது எதிரி ஆஜர்படுத்தப்பட்டார். 2, 3 மற்றும் 4வது எதிரிகள் ஆஜர் இல்லை. 2, 3 மற்றும் 4வது எதிரிகள் தரப்பில் சட்டப்பிரிவு 355 BNSS Actன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது. எதிரிகள் தரப்பு வழக்கறிஞர் ஆஜர். சாட்சி காவல் துறையினரால் அடையாளம் காட்டப்பட்டு சாட்சினுடைய ஆதார் அடையாள அட்டையுடன் ஒப்பிடப்பட்டு சரிப்பார்க்கப்பட்டது.)

சாட்சி இன்று அழைக்கப்பட்டு திரு.S.சுரேஷ் கிரேடு 3 பெஞ்ச் கிளார்க் (மாற்றுப்பணி) அவர்களால் உள்ளார்ந்த உறுதி உரை செய்யப்பட்டு சத்தியபிரமாணம் செய்யப்பட்டு விசாரணை செய்யப்படுகிறார்.

<u>முதல் விசாரணை:</u> தொடங்கப்பட்ட நேரம் 12.48 பி.ப

நான் தேனி மாவட்டம் சுக்காங்கலில் குடியிருந்து வருகிறேன். நான் சம்பவத்தன்று டாஸ்மாக் கடையில் சேல்மேனாக வேலை செய்து வந்தேன். அ.சா.1 மணிகண்டன் மேற்பார்வையாளராக வேலை செய்து வந்தார். கடந்த 19.12.2016 அன்று இரவு 10.30 மணியளவில் நாங்கள் வீட்டிற்கு சென்றபொழுது ராஜா என்பவர் போன் செய்து அ.சா.1 மணிகண்டனை அடித்து அவர் வைத்திருந்த பணத்தை சில நபர்கள் பறித்து சென்றதாக என்னிடம் தகவல் கூறினார். பின்னர் வீரபாண்டி ஆரம்ப சுகாதர நிலையத்திற்கு சென்று அங்கு சிகிச்சை பெற்று வந்த அ.சா.1 மணிகண்டனை

பார்த்தோம். அவரிடம் விசாரித்தபொழுது 3, 4 நபர்கள் சம்பவத்தில் ஈடுபட்டதாக கூறினார். போலீசார் என்னை விசாரித்தனர்.

<u>எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை:</u>

அ.சா.1 மணிகண்டன் நான் பணிபுரியும் கடையின் மேற்பார்வையாளர் என்றால் சரிதான். இவ்வழக்கு சம்பவம் பற்றி நேரடியாக எனக்கு எதுவும் தெரியாது. அ.சா.1 எனக்கு தெரிந்தவர் என்பதால் அவருக்கு ஆதரவாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

விசாரணை முடிக்கப்பட்ட நேரம் 12.52 பி.ப

*Taken down by me/before me in open Court interpreted read over to the witness and admitted by the deponent to be correct.*

SARAVANAKUMAR.G.N Digitally signed by SARAVANAKUMAR.G.N Date: 2025.08.20 15:22:53 +0530

Chief Judicial Magistrate,
Theni
Date:20.08.2025

நீதிமன்ற படிவ எண்.53
(விதி 42ஐ காண்க)
<u>சாட்சியின் சான்றுரை</u>
(கு.வி.மு.ச., அத்தியாயம் XXIII)
தலைமை நீதித்துறை நடுவர் நீதிமன்றம், தேனி.

S.C.No. 82/2019

<u>அ.சா: 6 (LW 6சாட்சியின் சான்றுரை</u>

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | சுருளியாண்டவர். | சாதி | : | |
| தந்தை பெயர் | : | | தொழில் | : | |
| கிராமம் | : | | மதம் | : | |
| வட்டம் | : | | வயது | : | |

20.08.2025 நாளன்று 1969ம் ஆண்டு உறுதிமொழிச் சட்டம் (மையச் சட்டம் 44/1969) இன் வகைமுறைகளுக்கு உட்பட்டு உளமாற உறுதியளிக்கப்படுகிறது.

---

(1வது எதிரி ஆஜர். 5வது எதிரி ஆஜர்படுத்தப்பட்டார். 2, 3 மற்றும் 4வது எதிரிகள் ஆஜர் இல்லை. 2, 3 மற்றும் 4வது எதிரிகள் தரப்பில் சட்டப்பிரிவு 355 BNSS Actன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது. எதிரிகள் தரப்பு வழக்கறிஞர் ஆஜர். சாட்சி காவல் துறையினரால் அடையாளம் காட்டப்பட்டு சாட்சினுடைய ஆதார் அடையாள அட்டையுடன் ஒப்பிடப்பட்டு சரிப்பார்க்கப்பட்டது.)

சாட்சி இன்று அழைக்கப்பட்டு திரு.S.சுரேஷ் கிரேடு 3 பெஞ்ச் கிளார்க் (மாற்றுப்பணி) அவர்களால் உள்ளார்ந்த உறுதி உரை செய்யப்பட்டு சத்தியபிரமாணம் செய்யப்பட்டு விசாரணை செய்யப்படுகிறார்.

<u>முதல் விசாரணை:</u> தொடங்கப்பட்ட நேரம் 12.52 பி.ப

நான் தேனி மாவட்டம் சுக்காங்கல்பட்டியில் குடும்பத்துடன் குடியிருந்து வருகிறேன். சம்பவத்தன்று டாஸ்மாக் கடையில் உதவி சேல்ஸ்மேனாக பணிபுரிந்து வந்தேன். கடந்த 19.12.2016 அன்று இரவு 10.00 மணிக்கு மேல் நானும் சேல்ஸ்மேனும் வீட்டிற்கு சென்றபொழுது அ.சா.1 மணிகண்டன், அ.சா.2 கணபதியும் வடக்கு பக்கமாக இருசக்கர வாகனத்தில் சென்றார். சிறிது நேரம் கழித்து போன் மூலம் அ.சா.1 கீழே விழுந்து காயம் ஏற்பட்டு வீரபாண்டி மருத்துவமனையில் இருப்பதாக கேள்விபட்டு அங்கு சென்று பார்த்தோம். அ.சா.1 மணிகண்டனை விசாரித்தபொழுது சுமார் 5 நபர்கள்

தன்னை காயப்படுத்தி பணத்தை பறித்துக்கொண்டதாக என்னிடம் கூறினார். போலீசார் என்னை விசாரித்தனர்.

எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை:

அ.சா.1 மணிகண்டன் நான் பணிபுரியும் கடையின் மேற்பார்வையாளர் என்றால் சரிதான். இவ்வழக்கு சம்பவம் பற்றி நேரடியாக எனக்கு எதுவும் தெரியாது. அ.சா.1 எனக்கு தெரிந்தவர் என்பதால் அவருக்கு ஆதரவாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

விசாரணை முடிக்கப்பட்ட நேரம் 12.55 பி.ப

*Taken down by me/before me in open Court interpreted read over to the witness and admitted by the deponent to be correct.*

SARAVANAKUMAR.G.N Digitally signed by SARAVANAKUMAR.G.N Date: 2025.08.20 15:23:00 +0530

Chief Judicial Magistrate,
Theni
Date:20.08.2025

நீதிமன்ற படிவ எண்.53
(விதி 42ஐ காண்க)
<u>சாட்சியின் சான்றுரை</u>
(கு.வி.மு.ச., அத்தியாயம் XXIII)
தலைமை நீதித்துறை நடுவர் நீதிமன்றம், தேனி.

S.C.No. 82/2019

<u>அ.சா: 7 (LW 7) சாட்சியின் சான்றுரை</u>

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | செந்தில்குமார். | சாதி | : | |
| தந்தை பெயர் | : | | தொழில் | : | |
| கிராமம் | : | | மதம் | : | |
| வட்டம் | : | | வயது | : | |

20.08.2025 நாளன்று 1969ம் ஆண்டு உறுதிமொழிச் சட்டம் (மையச் சட்டம் 44/1969) இன் வகைமுறைகளுக்கு உட்பட்டு உளமாற உறுதியளிக்கப்படுகிறது.
-----------------------------------------------------------------------

(1வது எதிரி ஆஜர். 5வது எதிரி ஆஜர்படுத்தப்பட்டார். 2, 3 மற்றும் 4வது எதிரிகள் ஆஜர் இல்லை. 2, 3 மற்றும் 4வது எதிரிகள் தரப்பில் சட்டப்பிரிவு 355 BNSS Actன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது. எதிரிகள் தரப்பு வழக்கறிஞர் ஆஜர். சாட்சி காவல் துறையினரால் அடையாளம் காட்டப்பட்டு சாட்சினுடைய ஆதார் அடையாள அட்டையுடன் ஒப்பிடப்பட்டு சரிப்பார்க்கப்பட்டது.)

சாட்சி இன்று அழைக்கப்பட்டு திரு.S.சுரேஷ் கிரேடு 3 பெஞ்ச் கிளார்க் (மாற்றுப்பணி) அவர்களால் உள்ளார்ந்த உறுதி உரை செய்யப்பட்டு சத்தியபிரமாணம் செய்யப்பட்டு விசாரணை செய்யப்படுகிறார்.

<u>முதல் விசாரணை:</u> தொடங்கப்பட்ட நேரம் 12.56 பி.ப

நான் தேனி மாவட்டம் சின்னமனூர் குடும்பத்துடன் குடியிருந்து வருகிறேன். சம்பவத்தன்று டாஸ்மாக் கடையில் சேல்ஸ்மேனாக பணிபுரிந்து வந்தேன். கடந்த 19.12.2016 அன்று இரவு 10.00 மணிக்கு மேல் நானும் சேல்ஸ்மேனும் வீட்டிற்கு சென்றபொழுது அ.சா.1 மணிகண்டன், அ.சா.2 கணபதியும் வடக்கு பக்கமாக இருசக்கர வாகனத்தில் சென்றார். சிறிது நேரம் கழித்து போன் மூலம் அ.சா.1 கீழே விழுந்து காயம் ஏற்பட்டு வீரபாண்டி மருத்துவமனையில் இருப்பதாக கேள்விபட்டு அங்கு சென்று பார்த்தோம். அ.சா.1 மணிகண்டனை விசாரித்தபொழுது சுமார் 5 நபர்கள் தன்னை

காயப்படுத்தி பணத்தை பறித்துக்கொண்டதாக என்னிடம் கூறினார். போலீசார் என்னை விசாரித்தனர்.

<u>எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை:</u>

அ.சா.1 மணிகண்டன் நான் பணிபுரியும் கடையின் மேற்பார்வையாளர் என்றால் சரிதான். இவ்வழக்கு சம்பவம் பற்றி நேரடியாக எனக்கு எதுவும் தெரியாது. அ.சா.1 எனக்கு தெரிந்தவர் என்பதால் அவருக்கு ஆதரவாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

விசாரணை முடிக்கப்பட்ட நேரம் 12.57 பி.ப

*Taken down by me/before me in open Court interpreted read over to the witness and admitted by the deponent to be correct.*

SARAVANAKUMAR.G.N Digitally signed by SARAVANAKUMAR.G.N Date: 2025.08.20 15:23:07 +0530

Chief Judicial Magistrate,
Theni
Date:20.08.2025